இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 195 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 12 – திங்கள்கிழமை 24 பிப்ரவரி 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 195 : Thiruvalluvar Year - 2056 - Maasi 12 - Monday 24 February 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.2.2025) கடலூர் மாவட்டம், திருப்பயரில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்திய "பெற்றோர்களைக் கொண்டாடுவோம்" விழாவில், அரசுப் பள்ளி களுக்கு நன்கொடை வழங்கிய கொடையாளர்களை சிறப்பிக்கும் வகையில் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்து – தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழக மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, வனத் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் இராதாகிருஷ்ணன், இராஜேந்திரன், அய்யப்பன், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மாநில துணைத் தலைவர் பி.வி. பி.முத்துக்குமார், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி.சந்திரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேசிய கல்விக் கொள்கை, சமூக நீதிக்கு – தமிழுக்கு – தமிழர்களுக்கு – தமிழ்நாட்டுக்கு – நம்முடைய குழந்தைகளின் எதிர்காலத்திற்கு வேட்டு வைக்கும் கொள்கை! எனவே அதை,

# எந்த நிலையிலும் ஏற்க மாட்டோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – பெற்றோர் ஆசிரியர் கழக மாநாட்டில் பிரகடனம்!

**விருத்தாசலம், பிப். 24 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (22.2.2025) கடலூர் மாவட்டம், திருப்பயரில் தமிழ்நாடு பெற்றோர், ஆசிரியர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற "பெற்றோர்களைக் கொண்டாடுவோம்" மண்டல மாநாட்டில் உரையாற்றுகையில், "தேசிய கல்விக் கொள்கை, சமூக நீதிக்கு – தமிழுக்கு – தமிழர் களுக்கு – தமிழ்நாட்டுக்கு – நம்முடைய குழந்தைகளின் எதிர்காலத் திற்கு வேட்டு வைக்கும் கொள்கை! எனவே அதை, எந்த நிலையிலும் ஏற்க மாட்டோம்!" என்று குறிப்பிட்டார்.**

இம்மாநாட்டில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி! சின்னஞ் சிறு கைகளை நம்பி... ஒரு சரித்திரம் இருக்குது தம்பி! அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம், தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம், இரண்டும் இருந் தால் பெயரை வாங்கலாம், பெயரை வாங்கினால் ஊரை வாங்கலாம்! நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி" என்ற கவிஞர் வாலி யின் கவிதை வரிகளுக்கு இலக்கண மாக, ஒரு எடுத்துக்காட்டாக அமைந் திருப்பதுதான் இந்த மாநாடு, இந்த பெற்றோர் – ஆசிரியர் கழக மாநாடு!

முதலில் நான் இந்த நிகழ்ச்சிக்கு தாமத மாக வந்ததற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், நான் நெய்வேலியிலிருந்து காலை 8.30 மணி அளவில் புறப்பட்டேன். நியாயமாகப் பார்த் தால், ஒரு மணி நேரத்திற்குள் வந்து சேர்ந் திட முடியும். ஆனால், வழியெங்கும் மக்கள் கடல். அதுதான் காரணம். ஆசிரியர்கள் இருக்கிறீர்கள். ஸ்கூல் பையன் போல கார ணம் சொல்கிறேன் என்று தயவுசெய்து நினைக்காதீர்கள். காலையில் 8.30 மணிக்கு புறப்பட்டேன்; வருகிற வழி முழு வதும் மக்கள் சந்திப்பு. இதுதான் உண்மை யான காரணம்.

என் மனதில் இப்போது என்ன தோன்று கிறது என்றால், இப்படியே பேசாமல் உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்படு கிறது. உங்கள் முகத்தில் தெரியக்கூடிய எழுச்சி, மலர்ச்சி, மகிழ்ச்சி. இதைப் பார்க் கின்ற அந்த உணர்வோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

**வருங்காலத் தலைமுறையை வார்ப்பிக்கும் பெற்றோர் – ஆசிரியரை வணங்குகிறேன்!**

வருங்கால நம்பிக்கை நட்சத்திரங் களான மாணவக் கண்மணிகளை வார்ப் பித்தும், வளர்த்தெடுத்தும் வருகின்ற பெற் றோரையும் ஆசிரியர்களையும் வணங்கு கிறேன்! வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

அம்மா, அப்பா, ஆசிரியர், தெய்வம் என்று சொல்லுவார்கள். கல்வி என்னும் முதன்மைப் பொருளை கற்பிக்கும் அன்னை, தந்தை, ஆசிரியர் கூடியிருக்கின்ற மாநாடு இது! நீங்கள் மொத்தமாகக் கூடி இருப்பது இதுவரை தமிழ்நாடு பார்க்காத காட்சி! ஒட்டு மொத்த நாடும் பார்த்து அதிசயித்திருக்கின்ற காட்சி! இதுதான் தமிழ்நாடு! இதுதான் நம்மு டைய மாநில கல்வித் திட்டத்தின் சிறப்பு!

**கல்வித் துறையில் உலகத் தரத்தில் சாதனைகள்!**

தமிழ்நாடு அரசு செய்வது எல்லாமே சாத னைகள்தான்! அதில் கல்வித் துறையில் உலகத் தரத்திலான சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அந்த வரிசையில், இதுவும் சாதனை மாநாடாக அமைந்திருக்கிறது!

பெற்றோர் – ஆசிரியர்கள் – மாணவர்கள் என்று மூன்று தரப்பிற்குமான கருத்துக் களை வழங்குகின்ற மாநாடு இது! இதில் நான் ஆசிரியரும் இல்லை; மாணவனும் இல்லை... பெற்றோரே... நான், உங்களில் ஒருவன்! உங்கள் உள்ளத்தின் உணர்வு களை அறிந்தவன். அதற்கேற்ப கடமை களைச் செய்பவன்!

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், பள்ளிகளை உருவாக் கினோம் மாணவர்களைச் சேர்த்தோம் படிக்க வைத்தோம் மதிப்பெண் வாங்க வைத்தோம் வெளியில் அனுப்பினோம் இத் துடன் பள்ளிக் கல்வித் துறையின் கடமை முடிந்து விட்டதாக யாரும் நினைக்க வேண் டிய அவசியம் இல்லை.

**அரசுக்கும் உங்கள் பிள்ளைகள் மீது அக்கறை உண்டு!**

'பெற்றோரைக் கொண்டாடுவோம்' என்ற இந்த நிகழ்ச்சி பெற்றோருக்கும், ஆசிரியர் களுக்குமான நல்லுறவை உண்டாக்குவதற் காகத் தொடங்கப்பட்டது. பெற்றவர்களுக்கு எந்த அளவுக்கு பிள்ளைகள் மேலே அக்கறை இருக்கிறதோ, அதே அளவு அக்கறை, இந்த அரசுக்கும் இருக்கிறது என்று நிரூபிக்கும் வகையில், இந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சி, தமிழ்நாடு மாநில பெற் றோர் ஆசிரியர் கழகத்தின் வாயிலாக, மதுரை, திருச்சி, தருமபுரி, கோவை, காஞ்சி புரம், நெல்லை ஆகிய ஆறு மண்டலங் களில், வெகு சிறப்பாக இதுவரை நடைபெற் றிருக்கிறது. இதுவரை நடந்த ஆறு நிகழ்ச்சி களில், சுமார் 1 இலட்சத்து 95 ஆயிரம் பள்ளி பெற்றோர் – ஆசிரியர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். ஏழாவது மாநாடாக இங்கே விருத்தாசலத்தில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டுக்கு கடலூர், விழுப்புரம், திரு வண்ணாமலை, பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 7 மாவட்டங்களில் இருக்கின்ற எல்லாப் பள் ளிகளின் பெற்றோர் ஆசிரியர் கழகத்திலும் இருந்து சுமார் ஒரு இலட்சம் உறுப்பினர்களா கிய நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

**மாநாட்டில் பங்கேற்றோர்க்கு தமிழ்நாடு அரசின் நன்றி!**

பெற்றோர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு பணிகளில் இருப்பவர்கள். அது எல்லாவற் றையும் ஒதுக்கி வைத்துவிட்டு எங்கள் அழைப்பை ஏற்று வந்திருக்கிறீர்கள். வருகை தந்திருக்கின்ற உங்கள் எல்லோருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் மனமார்ந்த நன் றியை நானும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இது ஏதோ கூடிக் கலைகின்ற மாநாடு இல்லை; தமிழ்நாடு அரசால் மாணவர் களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வரு கின்ற திட்டங்களை உங்களுக்குச் சொல்வ தற்கான ஒரு நல்வாய்ப்பு!

**நல்லெண்ணம் கொண்ட நன்கொடையாளர்களுக்குப் பாராட்டு!**

மாணவர்கள் உள்ளத்தில் நேர்மறை எண்ணங்கள் தோன்றி, சாதனைகள் புரிவ தற்கான விழிப்புணர்வையும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அடுத்த கட்டத்துக்கு அழைத்துக் கொண்டு செல்வது மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு சார்ந்த விழிப் புணர்வையும் இந்த மாநாட்டின் மூலமாக தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை வழங்கி வருகிறது.

● அரசுப் பள்ளிகளுக்கு பெற்றோர்கள், பள்ளியின் முன்னாள் மாணவர்கள், பொது மக்கள் எண்ணற்ற பொருட்களை நன்கொ டையாக வழங்கி ஊக்கம் கொடுத்து வருகி றார்கள். அரசுப் பள்ளிகளுக்கு இதுவரை நன்கொடை வழங்கிய கொடையாளர்கள் இங்கே பாராட்டப்பட்டிருக்கிறார்கள். பெற் றோர் ஆசிரியர் கழகம் மிகச் சிறப்பான பணி களை தொய்வில்லாமல் செய்து வருகிறது.

● தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசி ரியர் கழகத்தின் மூலம் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர் களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில், மாதிரி வினாத்தாள் மற்றும் தீர்வு புத்தகங்கள் மிகக் குறைந்த விலையில் அச்சிடப்பட்டு, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் தலா இரண்டு விற்பனை மையங்கள் மூலம் விற்பனை செய்து வருகிறார்கள்.

தொடர்ச்சி 3– ஆம் பக்கம்

### தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி பொறுப்பு வகிக்கும் காலம் ; பள்ளிக் கல்வித் துறையின் பொற்காலம்!

ஒவ்வொரு மாணவ – மாண வியரும் தமிழ்நாட்டின் செல்வம் என்ற நினைப்புடன் அவர்களை வளர்த்துக் கொண்டு வருகி றோம். அதனை தன்னுடைய பெருங்கடமையாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருப்பவர் தான் நம்முடைய பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள்.

தம்பி அன்பில் மகேஸ் பொய் யாமொழி பொறுப்பு வகிக்கும் காலம், 'தமிழ்நாடு பள்ளிக்கல் வித் துறையின் பொற்காலம்' என்று போற்றத்தக்க வகையில் அவர் செயல்பட்டு வருகிறார்.

பள்ளிக்கல்வித் துறையை மகத்தான வகையில் அவர் வளர்த்து வருகிறார்!

- பள்ளிக் கல்வியை இந்தியாவின் இரண்டாம் இடத்தை நோக்கி உயர்த்தி இருக்கிறார்.
- இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தை சிறப்பாக நடத் திக் காட்டினார்.
- 10, 12ஆம் வகுப்பு மாண வர்களின் தேர்ச்சியை அதிகரித்திருக்கிறார்.
- 80 ஆயிரம் ஆசிரியர் களுக்கு கைக்கணினிகள் வழங்கி இருக்கிறார்.
- 22 ஆயிரத்து 931 ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைத் திருக்கிறார்.
- 8 ஆயிரத்து 209 ஹை டெக் லேப்கள் அமைத் திருக்கிறார்.
- கலைத் திருவிழாக்களை நடத்தி இருக்கிறார்.
- போட்டிகளில் வென்ற மாணவர்களை வெளி நாட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்றிருக்கிறார்.
- ஏன், ஆசிரியர்களையும் வெளிநாடு பயணத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றிருக்கிறார்.
- 234 சட்டமன்றத் தொகுதி களிலும் இருக்கின்ற பள் ளிக்கூடங்களை ஆய்வு செய்திருக்கிறார். அதைத் தான் இங்கே காணொலி காட்சியின் மூலமாக நீங் கள் பார்த்தீர்கள்.
- மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழாக்களை நடத்து கிறார்.
- பன்னாட்டு புத்தகத் திரு விழாவை மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வருகிறார்.

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.



சில நாட்களுக்கு முன்பு பாரத சாரண சாரணியர் இயக் கத்தின் வைர விழாவை இந்தி யாவே வியக்கும் வகையில் நடத்திக் காட்டினார். அந்த விழாவில் நான் பேசும்போது சொன்னேன்.... "அன்பில் மகே ஸின் வளர்ச்சியைப் பார்க்கும் போது அவருடைய அப்பா, என் ஆருயிர் நண்பன் அன்பில் பொய்யாமொழி இல்லையே என்கின்ற வருத்தம் எனக்கு ஒரு பக்கம் இருந்தாலும், பொய் யாமொழி இடத்தில் இருந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று நான் சொன்னேன். அந்த மகிழ்ச்சியை இன்னும் அதிகரிக்கும் விழாவாக இந்த விழா அமைந்திருக்கிறது.

## ஒன்றிய அரசு பள்ளிக் கல்விக்கு நிதி வழங்கவில்லை என்றாலும், மாநிலத்தில் கல்வித் திட்டங்கள் எதையும் நிறுத்தாமல், நாங்கள் செயல்படுத்துவோம்!